கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.

அ.வ.எண்.192/2017

நாள். 01.08.2025

2025ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01 ஆம் தேதி என்பவரின் வாக்குமூலம் (1989–ம் ஆண்டு 55வது விதியின் 9வது ஏற்பாட்டின்படி) திரு.M.கனகலிங்கம், உதவியாளர் என்பவரது ஆணையீட்டால் உறுதி கூறப்படுகின்றது. பிரமாணம் செய்யப்படுகிறது.

===========================================================================

| | |
|---|---|
| பெயர் = திரு. கணேசன் | தகப்பனார் பெயர்= திரு. குருசாமி |
| கிராமம் = | தாலுக்கா = |
| தொழில் = | வயது = |

===========================================================================

**PW3 மு.வி**

1) நான் மதுரை வட்டார தடவியல் ஆய்வகத்தில் அறிவியல் அலுவலர் மற்றும் ஆவண நிபுணராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் நான் நீதிமன்றத்தில் இருந்து வந்த அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இவ்வழக்கில் 05.07.1984 அன்று பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மற்றும் முன்னாள் ராணுவ வீரர் NCC குரூப் கேன்டீன் ஆகிய ஆவணங்கள், மாவட்ட வருவாய் அலுவலர், திருச்சிராப்பள்ளி கடித எண்.ந.க.ஆ 5/6306/2021 நாள்.30.01.2021 படி பதிவு தபால் மூலம் எங்கள் ஆய்வகத்தில் 04.02.2022 அன்று பெறப்பட்டது.

2) எங்களது ஆய்வகத்தில் மேற்படி ஆவணங்களுக்கு அலுவலக ஆவண எண்.16/2022 என்ற ஆவண எண் வழங்கப்பட்டது. மேற்படி இரண்டு ஆவணங்களில் உள்ள கையொப்பங்களை கவனத்துடன் நான் ஆய்வு செய்தேன். எங்களது ஆய்வகத்தில் இரண்டு ஆவணங்களை ஒப்பீடு செய்ய கோரியதால் இரண்டு ஆவணங்களில் உள்ள கையொப்பங்களுக்கு

A and B என்று இரு வரிசைகள் வழங்கப்பட்டுள்ளது. 05.07.1984 தேதிய பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தில் கண்ட கையொப்பங்களுக்கு B1 முதல் B10 என்றும், முன்னாள் ராணுவ வீரர் NCC குரூப் கேன்டீன் புத்தகத்தில் உள்ள கையொப்பங்களுக்கு A1 முதல் A24 என்றும் குறியீடு வழங்கப்பட்டது. மேற்படி கையொப்பங்களை எங்களது ஆய்வகத்தில் கவனத்துடன் ஆய்வு செய்து A1 முதல் A24 வரையிலான கையொப்பங்களை செய்த நபர் B1 முதல் B10 வரையிலான கையொப்பங்களை செய்யவில்லை என்று ஆய்வறிக்கையில், அதற்கான காரணத்தாள் (Reasoning Sheet)ஐ இணைத்து, ஆவணங்களுடன் முதுநிலை வருவாய் ஆய்வாளர் திரு. நாகநாதன் என்பவர் மூலம் 23.08.2022 ல் திருச்சி மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்பட்டது.

3) திருச்சி மாவட்ட வருவாய் அலுவரிடம் இருந்து மேற்படி இரு ஆவணங்களில் உள்ள கையொப்பங்களை ஒப்பீடு செய்ய மட்டுமே கோரப்பட்டிருந்தது. என்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.3 ஆவணம் தான், திருச்சி மாவட்ட வருவாய் அலுவலகத்தில் இருந்து எங்கள் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்ட நான் மேற்சொன்ன 05.07.1984 அன்று பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் மற்றும் முன்னாள் ராணுவ வீரர் NCC குரூப் கேன்டீன் ஆகிய ஆவணங்கள் என்றால் சரிதான், மேற்படி ஆவணங்களின் அசல் எங்களுக்கு அனுப்பப்பட்டது, அ.சா.ஆ.3 அதன் நகலாக உள்ளது.

முதல் விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கானது ஒத்திவைக்கப்படுகிறது.